(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 10.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2024 மார்ச் 19, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி தேசிய மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகள் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அக் காரணத்தினால் மேற்படி மருத்துவமனைக்குச் சொந்தமான காணிகளில் அரைவாசிக்கு மேல் மருத்துவமனை இழந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு எத்தனை ஏக்கர்களென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் அனுமதியின்றி குடியிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி குடும்பங்கள் தொடர்பாக இன்றளவில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அனுமதியற்ற குடியிருப்பாளர்களை பிறிதொரு பிரதேசத்தில் குடியமர்த்துவதற்கு இன்றளவில் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் திட்டம் யாதென்பதையும்;

(vi) ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

42/2024

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்புறுபிட்டிய, மிரிஸ்வத்த வளவ்வயில் வசித்த சாரா லோரென்சினா விஜேசிங்ஹ அம்மையார் தனது பெற்றோரை நினைவு கூருமுகமாக மாத்தறை, ராஹுல வித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்த குணதிலக்க ஞாபகார்த்த மண்டபம் உடைத்து அகற்றப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மண்டபத்தை உடைத்து அகற்றுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அது உடைத்து அகற்றப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குணதிலக்க ஞாபகார்த்த மண்டபத்திற்குப் பதிலாக நிர்மாணிக்கப்படும் புதிய ஞாபகார்த்த மண்டபத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்பார்க்கப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(iii) புதிய ஞாபகார்த்த மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக கல்வியமைச்சினால் செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) புதிய ஞாபகார்த்த மண்டபத்தின் நிர்மாணப் பணிகளில் இன்றளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு யாதென்பதையும்;

(ii) எஞ்சிய பகுதியினைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

310/2024

கௌரவ ஹேஷா விதானகே,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் செயற்பாட்டிலுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அரசாங்கத்தில் பதிவு செய்யாது முன்பள்ளிகளை நடத்திச் செல்ல முடியுமா என்பதையும்;

(iv) முன்பள்ளிகளைக் கண்காணிப்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(v) முன்பள்ளியொன்றை நடத்திச் செல்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

355/2024

கௌரவ கெவிந்து குமாரதுங்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் நியமிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அத்திகதியிலும் 2024.01.31ஆந் திகதியிலும் நுகர்வு வகுதி ஒவ்வொன்றிலும் மின்சார அலகு ஒன்றுக்கென அறவிடப்பட்ட கட்டணமும், அக்கட்டண அதிகரிப்பும் சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலும் 2024.01.31 ஆம் திகதியிலும்;

(ii) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து 2024.01.31 ஆம் திகதி வரை சிவப்பு கட்டணப் பட்டியல் வழங்கப்பட்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட, மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011.01.01 ஆம் திகதியிலிருந்து 2020.12.31 ஆம் திகதி வரை மின் இணைப்பை பெற்றுக்கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவற்றுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்தையும்;

(iii) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து 2024.01.31 ஆம் திகதி வரை மின் இணைப்பை பெற்றுக்கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவற்றுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்தையும்;

(v) தற்போதைய அமைச்சரின் பதவிக் காலத்தில் மின் இணைப்பை பெற்றுக் கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர் களின் எண்ணிக்கை, வருடாந்த சராசரி பெறுமானமாக யாதென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

356/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை, சிங்கள மொழி மூல, தமிழ் மொழி மூல மற்றும் சிங்கள, தமிழ் மொழி மூல அடிப்படையிலும்;

(ii) அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, 10 இற்குக் குறைந்த, 10-20 இடைப்பட்ட, 20-50 இடைப்பட்ட, 50-100 இடைப்பட்ட மற்றும் 100-200 இடைப்பட்ட எனும் வகைப்படுத்தலின் அடிப்படையிலும்;

(iii) அரசாங்கப் பாடசாலைகளுக்கு மத்தியில் க.பொ.த. உயர் தரத்திற்காக கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கையும்;

(iv) க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) பாடத்துறைகளை ஆங்கில மொழியில் கற்பிக்கும் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கையும்;

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

366/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை 'அடையாளங் காணப்படாத' சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை வருட வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் பதிவாகின்ற மாவட்டங்களும் மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) சிறுநீரக நோயாளர்கள் பதிவாகின்ற இதர மாவட்டங்களும் அவ்வொவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறுநீரக நோயாளரொருவருக்கு அரசாங்கம் வழங்கும் மாதாந்த கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கொடுப்பனவுத் தொகையைப் பெறுகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

371/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கம், லஸாட் - பிரான்ஸ் கம்பனியிடம் (M/S Lazards-France) நிதி ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம் கிளிபர்ட் சான்ஸ் (M/S Clifford Chance LLP) கம்பனியிடம் சட்ட ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1242/2024

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களுக்கும் வேறு கடமைகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) தற்போது இலங்கை பொலிஸ் சேவையில் வெற்றிடங்கள் நிலவுமாயின், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப் பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி எண்ணிக்கையானது ஒவ்வொரு நபர்/நிறுவனத்திற்கு ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1282/2024

கௌரவ அசங்க நவரத்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) வன விலங்குகளின் செயற்பாடுகள் காரணமாக பயிர்ச் செய்கைகளுக்கு வருடாந்தம் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சேதங்களைக் குறைப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1285/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவகத்தில் பணிபுரியும் இயன் மருத்துவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு இயன் மருத்துவரின் பெயர் மற்றும் முகவரி தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி இயன் மருத்துவர்களின் கடமையின் தன்மை யாதென்பதையும்;

(iv) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(v) இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய பின்னடைவைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா 27/2024

கௌரவ சஜித் பிரேமதாச
கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல
கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்
கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன
கௌரவ ஹேஷா விதானகே
கௌரவ திலிப் வெதஆரச்சி
கௌரவ மனோ கணேசன்
கௌரவ மைத்ரீபால சிறிசேன
கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ நிரோஷன் பெரேரா
கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ அஜித் மான்னப்பெரும
கௌரவ நயன வாசலதிலக
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ தயாசிறி ஜயசேக்கர
கௌரவ ஷான் விஜயலால் த சில்வா
கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி
கௌரவ எம்.ஏ. சுமந்திரன்
கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க
கௌரவ நலீன் பண்டார ஜயமஹ
கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
கௌரவ எஸ்.எம். மரிக்கார்
கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார
கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்
கௌரவ கயந்த கருணாதிலக்க
கௌரவ கிங்ஸ் நெல்சன்
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா
கௌரவ அஸோக அபேசிங்ஹ
கௌரவ ரோஹண பண்டார
கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி
கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி
கௌரவ ஜே.சீ. அலவத்துவல
கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ வேலு குமார்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை,— நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான முழுப் பாராளுமன்றக் குழுவில், அச்சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்மானத்திற்கு முரணாக அச்சட்டமூலத்தின் சில பிரிவுகள் நிறைவேற்றப்படுகின்றதென கௌரவ எதிர்க்கட்சி உறுப்பினர்களினால் பலத்த எதிர்ப்பு முன்வைக்கப்பட்ட நிலையிலும் அத்தகைய எதிர்ப்பினைப் பொருட்படுத்தாமல் மேற்படி உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு முரணாக அச்சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆளும் கட்சிக்கு இடமளித்தமை ஊடாகவும்;

குறிப்பாக,

(அ) மேற்படி சட்டமூலத்தின் 13 ஆம் பிரிவு அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரைக்கு முரணானதெனவும் அதற்கமைவாக அப்பிரிவு விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டுமெனவும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர்நீதிமன்ற தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் அதற்கமைவாக மேற்படி திருத்தங்களை மேற்கொள்ளாமல் சாதாரண பெரும்பான்மையுடன் மேற்படி பிரிவினை நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஆ) மேற்படி சட்டமூலத்தின் 17 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அது விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் மற்றும் அப் பிரிவை முழுப் பாராளுமன்றக் குழுவில் நீக்குவதாக சட்டத்துறை தலைமை அதிபதி உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்த போதும் அப்பிரிவை எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறாகவே சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(இ) மேற்படி சட்டமூலத்தின் 20, 33(6), 34(1), 35(1) ஆம் பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அதற்கமைவாக விசேட பெரும்பான்மையுடன் அப்பிரிவுகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமெனவும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் அவ்வாறு விதந்துரைக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளாமல் சாதாரண பெரும்பான்மையுடன் அப்பிரிவுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஈ) மேற்படி சட்டமூலத்தின் 21 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும் அதற்கமைவாக அதனை விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில் மற்றும் அப்பிரிவை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான திருத்தங்களை முழுப் பாராளுமன்றக் குழுவில் முன்வைப்பதாக சட்டத்துறை தலைமை அதிபதி உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்த போதும் அவ்வாறாக செயற்படாமல் அப்பிரிவை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(உ) மேற்படி சட்டமூலத்தின் 22 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும், அதன்படி விசேட பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றக்கொள்ள வேண்டுமெனவும், சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், அத்தகைய திருத்தங்களை மேற்கொள்ளாது சாதாரண பெரும்பான்மையுடன் அப் பிரிவினை திருத்தம் செய்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

(ஊ) மேற்படி சட்டமூலத்தின் 31 ஆம் பிரிவு அரசியலமைப்புக்கு முரணானதெனவும், அதன்படி விசேட பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றக்கொள்ள வேண்டுமெனவும், சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ள நிலையில், அத்தகைய திருத்தங்களை மேற்கொள்ளாது சாதாரண பெரும்பான்மையுடன் அப் பிரிவினை திருத்தம் செய்வதற்கு இடமளித்தமை ஊடாகவும்;

இதனை உறுதிப்படுத்தி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினாலும், மேற்படி சட்டமூலத்தின் சில பிரிவுகளை நிறைவேற்றிக்கொள்வதில் உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு இணங்க செயற்படவில்லை எனவும் அவ்வாறு செயற்பட தவறியுள்ளதால், ஏலவே அச்சட்டமூலத்தை உள்ளவாறே நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசியமான வாக்குகள் பாராளுமன்றத்தில் கிடைத்துள்ளனவா என்பது தொடர்பில் பாரிய சிக்கல் எழுந்துள்ளதாகவும், சபாநாயகருக்கு அவ் ஆணைக்குழுவினால் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள 2024 பெப்ரவரி 08 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும்;

அத்துடன், நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான மூன்றாவது மதிப்பீட்டின்போது எதிர்க்கட்சியின் முதற்கோலாசான், மிகத்தெளிவாக வாக்கெடுப்பைக் கோரியிருந்தபோதும், அக் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாமலும், வாக்கெடுப்பு ஒன்றினை வழங்காமலும் அச்சட்டமூலம் மீதான மூன்றாவது மதிப்பீட்டை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றிக்கொள்ள இடமளித்தமை ஊடாகவும்;

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் மீதான முழுப் பாராளுமன்றக் குழுவில், அச்சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக, சில பிரிவுகளை ஆளும் கட்சி நிறைவேற்றிக் கொண்டுள்ளதால் அது தொடர்பில் ஆழமாக ஆராயும் வரை அச்சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கான சான்றுரையை அளிக்க வேண்டாமென எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் சபாநாயகரிடம் 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி நடைபெற்ற கட்சித் தலைவர்களின் விசேட கூட்டத்தின்போது கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அக் கோரிக்கையை கவனத்தில் கொள்ளாது அச்சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கு சான்றுரை அளித்துள்ளதன் ஊடாகவும்;

2024 பெப்ரவரி 26 ஆம் திகதி நடைபெற்ற அரசியலமைப்புப் பேரவைக் கூட்டத்தின் போது பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு சனாதிபதியினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்த பெயர் பரிசீலிக்கப்பட்டபோது, அவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்த நபரை அந்தப் பதவிக்கு நியமனம் செய்வதற்காக அரசியலமைப்புப் பேரவை அங்கத்தவர்களில் நான்கு பேர் ஆதரவாகவும், இரண்டு பேர் எதிராகவும் வாக்களித்திருந்த நிலையிலும் அத்துடன் இரண்டு அங்கத்தவர்கள் வாக்களிப்பதிலிருந்து விலகியிருந்த நிலையிலும் மற்றும் அதன்படி, அவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்த பெயரை பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு, அரசியலமைப்புப் பேரவையினால் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அங்கீகரித்திராத நிலையிலும் சனாதிபதி அவர்களுக்கு அது சம்பந்தமாக தெரியப்படுத்தியிருந்த 2024 பெப்ரவரி 26 ஆம் திகதிய கடிதத்தின் 4 ஆம் பந்தியில்,

> "எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 41(உ) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவைக் கூட்டமொன்றில் வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதற்கான ஏற்பாடுகள் வழங்கப்படவில்லை என்பதால், வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதானது சட்டத்தின் முன் உரிய விடயத்தை எதிர்ப்பதாக கருதப்படும் பட்சத்தில் மற்றும் அரசியலமைப்பின் 41(உ) (5) ஆம் உறுப்புரையின் பிரகாரம் குறிப்பிட்ட பிரச்சினை மீது சம எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைத்துள்ளதாக கருதப்படும் பட்சத்தில் தவிசாளர் என்ற வகையில் எனது அறுதியிடும் வாக்கையும் ஆதரவாக அளிப்பதாக தயவுடன் அறியத்தருகின்றேன்."

எனக் குறிப்பிட்டு அவ்வாறு சனாதிபதியினால் சிபாரிசு செய்யப்பட்ட நபரை சட்ட விரோதமாகவும், அரசியலமைப்புக்கு விரோதமாகவும் பொலிஸ் பரிசோதகர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிப்பதற்கு அரசியலமைப்புக்கு விரோதமான முறையிலும் சட்ட விரோதமான முறையிலும், சனாதிபதிக்கு உடந்தையாகவும், உறுதுணையாகவும், துணையாதரவாகவும் இருந்ததன் ஊடாகவும்;

பாராளுமன்ற நடவடிக்கைகளின் போது அரசியலமைப்பை அப்பட்டமாக மீறும் வகையில் சபாநாயகர் செயற்பட்டுள்ளதாலும்;

பாராளுமன்றம் மற்றும் அரசியலமைப்புப் பேரவை ஆகிய மீயுயர் நிறுவனங்கள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இழக்கப்படும் வகையில் சபாநாயகர் செயற்பட்டுள்ளதாலும்;

சபாநாயகர் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை அப்பட்டமாக மீறியுள்ளதாலும்;

சபாநாயகர் பக்கச் சார்பாக செயற்படுகின்றார் என்பதை தெளிவாக வெளிப்படுத்தி சபாநாயகர் பதவியின் சுயாதீனத்துக்கும், மாண்புக்கும் அப்பட்டமாக களங்கம் ஏற்படுத்தியுள்ளதாலும்;

பக்கச்சார்பின்றி சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பிலுள்ள சபாநாயகரே பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் மீறியுள்ளதாலும்; மற்றும்

சபாநாயகர் பதவியின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றத் தவறியுள்ளதாலும்;

சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள் மீது மேற்கொண்டும் நம்பிக்கை இல்லை என இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சேர் பெறுமதி வரிச்சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச் சட்டத்தின் 2அ ஆம் பிரிவின் கீழ் சேர் பெறுமதி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2023 டிசம்பர் 19 ஆம் திகதிய 2363/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுகப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுகப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடனும் இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகார சபைகளுடனான கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு 2023 நவம்பர் 17 ஆம் திகதிய 2358/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

வங்கித்தொழில் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2355/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(3) ஆம் உறுப்புரை மற்றும் 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்நுட்ப அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 22 ஆம் திகதிய 2311/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2370/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 (3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் (பதிற்கடமை) விதிக்கப்பட்டு, 2023 செப்டெம்பர் 21 ஆம் திகதிய 2350/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நஞ்சு வகைகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (218 ஆம் அத்தியாயமான) நஞ்சு வகைகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 77அ(6) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 80 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் VII ஆம் பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 28 ஆம் திகதிய 2338/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*23.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2352/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*24.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 2348/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் விதப்புரையுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2352/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் உரித்துப் பதிவு தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 டிசம்பர் 01 ஆம் திகதிய 2308/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*28.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டத்தின் 4 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் காடு வேளாண்மை ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத்திற்கும் (ICRAF) இடையிலான புரவலர் நாட்டு உடன்படிக்கை IV, V, VI, IX, X, XI, XII, XIII, XIV, XV மற்றும் XVI இன் விதிமுறைகளைச் செயற்படுத்துவது தொடர்பான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2348/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2022 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் மதியுரையின் மீதும் விதப்புரையின் மீதும் அச்சட்டத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 7 ஆம் பிரிவின் கீழ் பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் உரிமமளித்தல் தொடர்பாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 10 ஆம் திகதிய 2340/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

30.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.